தினமலர்

Dina Malar

Chennai Date:18.01.2008 Page no:05

# எல்.வி.பிரசாத் நூற்றாண்டு விழா

சென்னை, ஜன. 18– மறைந்த படத்தயாரிப்பாளர் எல்.வி.பிரசாத்தின் நூற்றாண்டு விழாவில் முதல்வர் கருணாநிதி மற்றும் நடிகர்கள், நடிகைகள் பங்கேற்றனர்.

மறைந்த படத்தயாரிப்பாளர் எல்.வி.பிரசாத்தின் நூற்றாண்டு விழா சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று நடந்தது. விழாவில் முதல்வர் கருணாநிதி பேசியதாவது:

சாதாரண வாழ்க்கையை துவங்கி, சரித்திர வாழ்க்கையின் சொந்தக்காரராக மாறினார் பிரசாத். அவர் தயாரித்த 'மனோகரா', 'இருவர் உள்ளம்', 'தாயில்லா பிள்ளை' ஆகிய மூன்று படங்களுக்கு நான் வசனம் எழுதினேன்.

மனோகரா வெற்றிகரமாக ஓடியது. சாதி, பேதமற்ற சமத்துவம் உருவாக வேண்டும், என்ற கருத்தை விளக்கிய படம்தான் 'தாயில்லா பிள்ளை'. அந்த படம் எடுத்த பெருமை அவருக்கு உண்டு. கலைத் துறையில் அதிக ஆர்வம் கொண்டவர். அவரது சமுதாய உணர்வை நாம் பெற வேண்டும்.

இவ்வாறு முதல்வர் கருணாநிதி பேசினார்.

விழாவுக்கு வந்தவர்களை எல்.வி.பிரசாத் மகன் ரமேஷ் பிரசாத் வரவேற்றார்.

இயக்குனர் கே.பாலசந்தர், இந்தி நடிகர் ஜிதேந்திரா, நடிகைகள் அஞ்சலி தேவி, சரோஜாதேவி, சவுகார் ஜானகி, நடிகர் கமலஹாசன், மத்திய நிலக்கரி துறை இணை அமைச்சர் தாசரி நாரயணராவ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.